X-SF Reg. No.: | | | | | | | T

# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 2

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரை: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் 15)

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. "முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே" – என்று பாடியவர்
அ) க. சச்சிதானந்தன் ஆ) துரை. மாணிக்கம்
இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

2. "நறுவீ" என்பதில் 'வீ' என்பதன் பொருள்
அ) மலர்கள் ஆ) மான்கள் இ) விண்மீன்கள் ஈ) கண்கள்

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. 'கண்ணன் எங்கே இருக்கிறார்?' என்ற வினாவிற்குக் கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று கூறுவது ................ வழு.
அ) பால் ஆ) வினா இ) விடை ஈ) மரபு

5. "மாசற விசித்த வார்புறு வள்பின்" என்று பாடிய புலவர் ......................., பாடப்பட்டவன் ..........................
அ) மோசிகீரனார், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
ஆ) ஔவையார், அதியமான்
இ) பரணர், தலையாளங்கானத்து செருவென்ற பாண்டியன்
ஈ) கபிலர், பாரி

6. முடக்கத்தான் என்பது ...................
அ) உழிஞைப்பூ ஆ) தும்பைப்பூ இ) வெட்சிப்பூ ஈ) நொச்சிப்பூ

7. 'அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை' – இவ்வடிகளில் அமைந்த நயம்
அ) எதுகை ஆ) மோனை இ) முரண் ஈ) இயைபு

8. 'தர்க்கத்திற்கு அப்பால்' சிறுகதை அமைந்த தொகுப்பு
அ) ரிஷிமூலம் ஆ) யுகசந்தி இ) குருபீடம் ஈ) ஒருபிடி சோறு

9. 'சரிந்தன அசும்பில் செல்லும்' இவ்வடிகளில் 'அசும்பு' என்பதன் பொருள்
அ) வானம் ஆ) நிலம் இ) காடு ஈ) கிளை

10. 'அருந்துணை என்பதைப் பிரித்தால் ....................
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை

11. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய"

12. இலக்கணக் குறிப்பு வரைக: உறுதுயர்
அ) உரிச்சொல் ஆ) வினைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) தொழிற்பெயர்

13. சுவல் என்பதன் பொருள்
அ) மலை ஆ) தூவி இ) தோள் ஈ) நற்சொல்

14. இப்பாடலை இயற்றிய ஆசிரியர்
அ) நப்பூதனார் ஆ) அதிவீரராம பாண்டியர்
இ) கீரந்தையார் ஈ) பரஞ்சோதி முனிவர்

15. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) காற்றே வா இ) பரிபாடல் ஈ) நளவெண்பா

**பகுதி II (மதிப்பெண்கள் 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4x2=8

16. **விடைகளுக்கேற்ற வினா அமைக்க.**
அ) இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.
ஆ) உணவின்றி ஐந்து வாரம் உயிர் வாழ முடியும்.

17. நன்னனின் வீரம் எத்தகையது?

18. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

19. "பொழுதேறப் பொன்பரவும் ஏரியில்
நல்வேளையில் நாட்டுவோம் கொழுவை" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

20. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5x2=10

22. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும் - இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

23. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

24. அகராதியில் கண்டு பொருள் தருக.
அ) வேலம், வேளம் ஆ) ஊண், ஊன்

25. **தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**
அ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள். (கலவைச் சொற்றொடராக மாற்றுக).
ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக).

26. கலைச்சொற்கள் தருக.
அ) Artifacts ஆ) Terminology

27. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக:
திருமணத்தை உறுதி செய்தல் திருமணம் வளைகாப்பு பிறந்தநாள் புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர்

28. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கா – என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இரு முனைகளிலும் சிறப்பு வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அரைவட்டப்பகுதியைப் பட்டுத் துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர்.

1) கா என்பதன் பொருள் யாது?
2) காவடி ஆட்டம் என்றால் என்ன?
3) காவடியை எவ்வாறு உருவாக்குகின்றனர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2x3=6

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக:

"வாளால் அறுத்துச்" ... எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப்பாடல்.

(அல்லது)

"தூசும் துகிரும்" ... எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. வேற்றுமைத் தொகாநிலைத் தொடரை சில சான்றுகளுடன் விளக்குக.

36. தற்குறிப்பேற்ற அணி குறித்து எழுதுக.

37. 'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு' – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப் பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. மதிப்புரை எழுதுக.

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

42. அ) பல கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

(அல்லது)

ஆ) மொழிப்பெயர்க்க.

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabaratha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3x8=24

43. அ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும், புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன ?

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – விண்வெளிப் பயணம் – விருதுகளும் அங்கீகாரங்களும் – முடிவுரை.